


**26.03.2025**

<u>தலைப்புச்செய்திகள்</u>

1. நாட்டில் ஆயிரத்து 410 இணையதள சூதாட்ட தளங்கள் முடக்கப்பட்டுள்ளதாக மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

2. அணுசக்தி கொள்கையில் பாதுகாப்பிற்கே உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அணுசக்தி துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திரசிங் கூறியுள்ளார்.

3. தமிழ்நாட்டில் முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 10 ஆயிரம் கிலோமீட்டர் நீள சாலைகள் மேம்படுத்தப்படும் என்று அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி தெரிவித்துள்ளார்.

4. மதுரை மற்றும் கோவையில் குப்பைகள் மூலம் மின் உற்பத்தி திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

5. மியாமி ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இன்று இந்தியாவின் யூக்கி பாம்ப்ரி போர்சுகலின் நுனோ இணை – பிரிட்டன் இணையை எதிர்கொள்கிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

*********

<u>அஷ்விணி வைஷ்ணவ் மக்களவை</u>

சைபர் குற்றங்கள் தடுப்பு ஒருங்கிணைப்பு மையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் ஆயிரத்து 410 சூதாட்ட விளையாட்டு தலங்கள் முடக்கப்பட்டுள்ளதாக மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதில் அளித்த அவர் இணையதள சூதாட்ட நடைமுறைகள் மாநில அரசின் பட்டியலில் உள்ளதால்

சட்டப்பூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ள மாநிலங்களுக்கு அதிகாரம் உள்ளதாக குறிப்பிட்டார்.

சைபர் குற்றங்கள் 14-சி பிரிவின் கீழ் இணையதள சூதாட்டம் பிரச்சனைகள் தொடர்பாக சட்ட அமலாக்க முகமைகள் நெறிமுறைகளை வகுக்க வகை செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

பாரதிய நியாய சன்ஹிதா குற்றவியல் நீதி சட்டத்தின் 112ஆவது பிரிவின் கீழ் ஆன்லைன் சூதாட்டங்கள் தொடர்பான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

*********

ஜிதேந்திரசிங் மக்களவை

நாட்டின் அணுசக்தி கொள்கையில் பாதுகாப்பிற்கே முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அணுசக்தி துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர் அணுசக்தி கொள்கையில் பாதுகாப்பிற்கு அடுத்தபடியாக தான் உற்பத்திக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதாக எடுத்துரைத்தார்.

நாட்டின் அணுமின் சக்தி திறன் தற்போதைய 8 ஆயிரத்து 180 மெகாவாட்டிலிருந்து இன்னும் 6 ஆண்டுகளில் 22 ஆயிரத்து 480 மெகாவாட்டாக அதிகரிக்கப்படும் என்றார்.

நம் நாட்டில் உள்ள அணுமின் உலைகள் பாதுகாப்பு நடைமுறைகளை உறுதியாக கடைபிடிப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

உலகளாவிய விதிமுறைகளுக்கும் குறைவாகவே நாட்டின் அணுசக்தி கதிர்வீச்சு இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பாதுகாப்பான நிலையான அணுசக்தி உற்பத்தியை இந்தியா அர்ப்பணிப்புடன் செயல்படுத்துவதாக டாக்டர் ஜிதேந்திசிங் தெரிவித்தார்.

*********

பிரல்ஹாத் ஜோஷி - மக்களவை

உணவு கலப்படம் செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய உணவு மற்றும் பொதுவிநியோகத்துறை அமைச்சர் திரு.பிரல்ஹாத் ஜோஷி எச்சரித்துள்ளார்.

மக்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதில் அளித்த அவர் இதுதொடர்பான புகார்கள் கிடைக்கப்பெற்றால் அரசு உடனடி விசாரணைகளை மேற்கொண்டு குற்றவியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக குறிப்பிட்டார்.

உணவு பொருட்களை பரிசோதிக்க நாடுமுழுவதும் 242 ஆய்வகங்கள், 4 பரிந்துரை ஆய்வகங்களுடன் நடமாடும் உணவு பரிசோதனை ஆய்வகங்கள் செயல்படுவதாக குறிப்பிட்டார்.

உணவு கலப்படம் தொடர்பான விழிப்புணர்வை சமூகவலைதளம் வாயிலாக அரசு ஏற்படுத்தி வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

நுகர்வோர் பாதுகாப்பிற்கான மிகப்பெரிய கருவியாக தேசிய நுகர்வோர் தொலைபேசி உதவி எண் திகழ்வதாக திரு.பிரல்ஹாத் ஜோஷி குறிப்பிட்டார்.

*********

<u>பாம்பன்</u>

பாம்பன் புதிய ரயில் பாலத்தை பிரதமர் திரு.நரேந்திரமோடி வரும் 6ஆம் தேதி திறந்துவைக்க உள்ளதாக தெற்கு ரயில்வே பொதுமேலாளர் திரு.ஆர்.என்.சிங் தெரிவித்துள்ளார்.

ராமேஸ்வரத்தில் ரயில்நிலைய கட்டுமான பணிகளை ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் இன்று பேசிய அவர் ராமேஸ்வரம் தனுஷ்கோடி இடையிலான ரயில்சேவை பணிகள் குறித்து மாநில அரசுடன் ஆலோசித்து விரைவில் அதற்கான பணிகள் துவங்கப்படும் என்றார்.

*********

<u>உபேந்திரா திவேதி</u>

உதகை வெலிங்டன் ராணுவ பயிற்சி மையத்தை ராணுவ தளபதி ஜென்ரல் உபேந்திரா திவேதி இன்று ஆய்வு செய்தார்.

மத்திய அரசின் பயிற்சி கட்டமைப்பு நடவடிக்கைகள் குறித்து அவரிடம் எடுத்துரைக்கப்பட்டது.

உதகை வெலிங்டன் பயிற்சி மைய அதிகாரிகளின் அளப்பரிய சேவையை பாராட்டிய ஜென்ரல் உபேந்திரா திவேதி அக்னி வீரர்களுக்கு தொழில் சார்ந்த பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

நாட்டில் வளர்ந்து வரும் அதி நவீன தொழில்நுட்பங்களுக்கு ஏற்றவாறு அக்னி வீரர்கள் தங்களை தயார்படுத்திக்கொண்டு எவ்வித சவாலையும் சமாளிப்பதற்கான ஆக்கப்பூர்வமான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் ஜென்ரல் உபேந்திரா அறிவுறுத்தியுள்ளார்.

*********

<u>மாவோயிஸ்ட்</u>

சட்டிஸ்கட் மாநிலம் சுக்மா மாவட்டத்தில் 6 பெண் மாவோயிஸ்ட்டுகள் உட்பட 9 மாவோயிஸ்ட்டுகள் மத்திய ரிசர்வ் காவல்படை அதிகாரிகள் முன்பு சரணடைந்துள்ளனர்.

சரணடைந்த இந்த 9 பேரும் பல்வேறு குற்றங்களில் தொடர்புடையவர்கள் ஆவர்.

இவர்கள் குறித்த தகவல்கள் தெரிவிப்பவர்களுக்கு 26 லட்சம் ரூபாய் பரிசுதொகை அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது,

*********

முதலமைச்சர்

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி தொகுதி ஆவுடையர் கோவிலில் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டப்படும் என முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர் 2 கோடியே 59 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் இப்பணிகள் வரும் மே மாதம் தொடங்கப்பட்டு அடுத்த ஆண்டு பிப்ரவரியில் முடிக்கப்படும் என்றார்.

*********

கொள்கை விளக்க குறிப்பு

தமிழ்நாட்டில் 13 மாவட்டங்களிலிருந்து சிறப்பாக செயல்படும் 36 ஊராட்சிகள் கற்றல் மையங்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளதாக மாநில ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் தமது துறை மானியக்கோரிக்கை கொள்கை விளக்க குறிப்பில் இன்று இதனை தெரிவித்துள்ள அவர் இதன்படி திருச்சி வையம்பட்டி, கீழ்அன்பில், பைத்தாம்பாறை, கலிங்கப்பட்டி, திருவாசி, காணக்கிளியநல்லூர் ஆகிய இடங்களில் கற்றல் மையங்கள் செயல்பட உள்ளதாக கூறினார்.

முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அடுத்த ஆண்டிற்குள் 10 ஆயிரம் கிலோமீட்டர் நீள ஊரக சாலைகள் 4 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என்றார்.

அதேபோல் 2 ஆயிரத்து 400 கிலோ மீட்டர் நீளமுள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் ஆயிரத்து 195 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என்றார்.

மகளிர் சுய உதவிக்குழுக்களின் விற்பனையை ஊக்குவிக்கும் வகையில், கண்காட்சிகள் சந்தை வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்.

“மின் வணிக அனுபவ அங்காடிகள்” மூலம் விற்பனை வலுப்படுத்தப்படும்.

இயற்கை சந்தைகள் மாதத்திற்கு இருமுறை நடத்தப்படும்.

சுய உதவிக்குழுக்களின் உற்பத்தி தயாரிப்புகள் மின்னனு வர்த்தக தளங்களில் பதிவேற்றம் செய்யப்படும் என்றும் கூறினார்.

சுற்றுலா தலங்களில் அங்காடிகள் அமைக்கப்பட்டு சுய உதவிக்குழுக்களின் உற்பத்தி பொருட்கள் காட்சிபடுத்துதப்படும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

*********

கேள்விநேரம் - கே.என். நேரு

மதுரை மற்றும் கோவையில் குப்பைகள் மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர் கள்ளக்குறிச்சி நகராட்சிகளில் குப்பை கழிவுகளை கொட்டுவதற்கான தகுந்த இடத்தை விலைக்கு வாங்க அரசு தயாராக உள்ளது என்றார்.

மக்கும் குப்பைகளை உரமாக தயாரித்து விவசாயிகளுக்கு வழங்கி வருவதாகவும் மக்காத குப்பகைள் தரம் பிரிக்கப்பட்டு உடனுக்குடன் சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்பபடுவதாகவும் கூறினார்.

வாய்ஸ்

*********

கவனஈர்ப்பு சேகர்பாபு

தமிழ்நாட்டில் கடந்த 4 ஆண்டுகளில் திருக்கோவில்களுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை 25 சதவிகிதம் அதிகரித்துள்ளதாக மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் கவன ஈர்ப்பு தீர்மானத்திற்கு இன்று பதில் அளித்த அமைச்சர் திருப்பதி கோவிலுக்கு நிகராக திருச்செந்தூர் பழனி திருக்கோவில்கள் சீரமைக்கப்பட்டதால், பக்தர்களின் எண்ணிக்கை தினசரி அதிகரித்து வருவதாக கூறினார்.

மாநிலத்தில் அன்னதானம் மற்றும் மருத்துவ வசதிகள் 17 கோவில்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் எடுத்துரைத்தார்.

*********

இருவரி

திருச்சி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை உரிமைகள் திட்டம் ஓரிட சேவை மையங்களுக்கான நடமாடும் சிகிச்சை பிரிவு வாகனங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் இன்று துவக்கிவைத்தார்.

வேலூர் மாவட்டத்தில் சுகன்யா சம்ருதி செல்வமகள் சேமிப்பு திட்டத்தின் கீழ் அஞ்சலகங்களில் இதுவரை 50 ஆயிரம் கணக்குகள் துவங்கப்பட்டுள்ளதாக அஞ்சலக கோட்ட முதுநிலை கண்காணிப்பாளர் ராஜகோபாலன் தெரிவித்துள்ளார்.

*********

தர்மபுரி

தர்மபுரி மாவட்ட முன்னாள் படைவீரர்கள் காக்கும் கரங்கள் திட்டத்தின் மூலம் கடனுதவி பெற்று பயன்பெறலாம் என ஆட்சித்தலைவர் திரு.சதீஷ் தெரிவித்துள்ளார்.

வாய்ஸ்

*********

<u>மணிமுத்தாறு</u>

நெல்லை மணிமுத்தாறு அருவியில் நீர்வரத்து சீரானதை அடுத்து 4 நாட்களுக்கு பின்னர் இன்றுமுதல் சுற்றுலா பயணிகள் அருவியில் குளிக்க வனத்துறை அனுமதி வழங்கியுள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

*********

<u>கோவில்</u>

திருவாரூர் அருள்மிகு ஸ்ரீதியாகராஜசுவாமி திருக்கோவில் ஆழித்தேரோட்டம் வரும் 7ஆம் தேதி நடைபெறுகிறது.

இதற்கான பிரம்மாண்ட தேர் கட்டுமான பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

*********

<u>டென்னிஸ்</u>

மியாமி ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இன்று இந்தியாவின் யூக்கி பாம்ப்ரி போர்சுகலின் நுனோ இணை – பிரிட்டன் இணையை எதிர்கொள்கிறது.

ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு செர்பியாவின் நோவாக் ஜோக்கோவிச் முன்னேறியுள்ளார்.

*********

<u>கிரிக்கெட்</u>

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் குஹாட்டியில் இன்று இரவு ஏழரை மணிக்கு ராஜஸ்தான் ராயல்ஸ் - கொல்கத்தா நைட்ரைடர்ஸை எதிர்கொள்கிறது.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது